# *திருப்பாவையில் ஐதிஹ்யங்கள்*

## *திருப்பாவையில் ஐதிஹ்யங்கள் 1*

நம் பூர்வாசார்யர்கள் உரை இடுகையில், அவர்கள் காலத்திலோ அல்லது முற்பட்ட காலத்திலோ நடந்த நிகழ்வுகள், ஆசார்யர்களின் வார்த்தைகள் உரையாடல்கள் சம்பவங்கள் கொண்டு விளக்குவது, வ்யாக்கியங்களில் காணக்கிடைக்கும்.

இப்படி திருப்பாவை வ்யாக்கியானங்கள் அருளிச்செய்த ஶ்ரீ பெரியவச்சான் பிள்ளை .. மூவாயிரப்படி, ஶ்ரீ அழகியமணவாளப் பெருமாள் நாயனார் .. ஆறாயிரப்படி, ஶ்ரீ ஆய் ஜனந்யாசார்யர் .. ஈராயிரப்படி உரைகளில் நோக்கலாம்.

அவற்றில் சிலவற்றை அனுபவிப்போம்.

ஶ்ரீ புத்தூர் ஸ்வாமி *திருப்பாவை வ்யாக்கியானங்கள்* என்னும் ஶ்ரீகோசம் நமக்கு பேருபகாரம் பண்ணியருளியதற்கு நம் க்ருதக்ஞதைகள்.

தாசன் - வானமாமலை பத்மனாபன் 🙇 - 16-12-2018

===

## *திருப்பாவையில் ஐதிஹ்யங்கள் 2*

### *அவதாரிகை 1*

*திருப்பாவைக்கு ஆள் கிடையாது* *எம்பெருமானார் வார்த்தை* ஈராயிரப்படி.

எம்பெருமானாரை திருப்பாவைக்கு பொருள் அருளிச்செய்ய வேணும் என்று விண்ணப்பிக்க, *திருப்பல்லாண்டுக்கு ஆள் கிடைக்கிலும், திருப்பாவைக்கு ஆள் கிடையாது*. இது எம்பெருமானார் வார்த்தை.

அதாவது எம்பெருமானிடத்தில் பக்தி ப்ரேமம் மிகுந்தவர்கள் திருப்பல்லாண்டுக்கு அதிகாரிகள் என்றபடி. திருப்பல்லாண்டு எம்பெருமானுக்கு மங்களாஸாசனம், ஶ்ரீ பெரியாழ்வார்

எம்பெருமானுக்கு என் வருகிறதோ என்று வயிறு பிடிக்கும் மங்களாஸாசனபரர்.

இடைச்சிகள் பாவனை, ப்ரேமம் அவர்கள் இடைக்கை வலக்கை அறியா பக்தி ப்ரேமம் உடையவர்களே திருப்பாவைக்கு அதிகாரிகள் என்றபடி.

அதாவது பாகவத ப்ரேமம் மிகுந்திருக்கும் என்றபடி.

இது கூடியிருந்து குளிர்ந்தேலோ என்றும்,

ஆறாம் பாட்டு முதல் பதினைந்தாம் பாட்டு வரை பல வகையான பாகவதர்களை ப்ரேமத்தை இட்டு விளிப்பதிலும் நோக்கலாம்.

பகவத் ப்ரேமம் மிகுந்தோர் கிடைத்தாலும் பாகவதப் ப்ரேமம் கிடைப்பது அரிது என்றபடி

தாசன் - வானமாமலை பத்மனாபன் 🙏 - 16-12-2018

===

## *திருப்பாவை ஐதிஹ்யங்கள்* 3

*அவதாரிகை இரண்டு*

*ஸ்ரீ அனந்தாழ்வானின் தேடல்*

ஸ்ரீ அனந்தாழ்வான், ஸ்ரீவில்லிபுத்தூர் திருக்குளத்தில் நீராடுகையில் ஏதோ தேடிக் கொண்டிருந்தாராம்.. என்ன என்று வினவியதற்கு,

*அப்பெண்பிள்ளைகள் குளித்ததொரு மஞ்சட் கிழங்காகிலும் கிடைக்குமா!* (நாலாயிரப்படி) - என்று தேடுவதாக ஸ்ரீ அனந்தாழ்வான் வார்த்தை.

அதாவது, ஸ்ரீ ஆண்டாளும் தோழிகளும் தங்களை கோபியர்களாகவே பாவித்து இக்குளத்தில் நீராடியது எப்பொழுதோ நடந்தது.

இருந்தாலும் அந்த ஸ்ரீ ஆண்டாள், இடைச்சி பாவம், பாகவத சம்பந்தம் தனக்கு ஏற்பட வேணும் என்று ஸ்ரீ அனந்தாழ்வானின் காலத்தில் தேடல் அவருடைய இந்த பாகவத சம்பந்த விருப்பத்தைத் தெளிவுபடுத்துகிறது.

பாகவத சம்பந்தம் மிகவும் உகந்தது என்றபடி.

இன்று அவதாரிகை முதற்பாசுரம் பதிக்க வேண்டுவதால், அவதாரிகை விஷ்யமாக இரண்டு பதிவுகள்.

முதல் பாசுரம் மாதப் பிறப்புக்குப் பிறகு மாலையில் பதிக்க முயல்கிறேன்

தாஸன் - வானமாமலை பத்மநாபன் - 16-12-2018 🙏

===

## *திருப்பாவையில் ஐதிஹ்யங்கள்* 4

*முதற் பாசுரம்*

*சிங்கக் குருகு*

நாலாயிரப்படி. - பட்டர் வார்த்தை.

கண்ணனை இளஞ்சிங்கம் என்றால், சிங்கக் குட்டி என்னலாவது இருக்க, *சிங்கக் குருகு* என்று பட்டர் அருளிச்செய்வது எங்ஙனனே?

குருகு என்பது பறவையின் குட்டியைக் குறிக்கும் சொல். அது மேலே பறக்கும் இயல்புடையது.

இந்த கண்ணன் என்னும் குட்டி, மேலே எழுந்து பாயும் சிங்கக் குட்டி என்று கண்ணனின் சீர்மையைக் சிங்கக் குட்டி போலே பாயும் பறவை போலே மேலெழும் என்றபடி.

*பிஷக்குகள் வாசல் போல்*

ஆறாயிரப்படி .. பட்டர் வார்த்தை.

எப்படி ஒரு வைத்தியரைக் காண கூட்டம் காத்துக் கிடக்குமாப் போலே, அப்படி ஸ்ரீ நந்தகோபர் திருமாளிகை வாசலில் க்ருஷ்ணனால் புண்பட்ட பெண்கள்..பிரிவாற்றனையால் வாடும் பெண்கள்.. நிறைந்திருக்கும்.

ஏரார்ந்த கண்ணி.....

*பிள்ளைக்குத் தாய் வழியாகாதே கண்* - ஸ்ரீ பிள்ளை உறங்காவில்லி தாசர் வார்த்தை.

கார்மேனிச் செங்கண் என்று கண்ணனின் கண்ணழகு ஸ்ரீ யசோதையார் வழியே வந்தது என்றபடி.

இங்கு Dr MAV ஸ்வாமியின் குறிப்பு நோக்கத்தக்கது.

அதாவது பொன்னாச்சியார் கண்களில் மயங்கியவர் எம்பெருமானாரால் எம்பெருமானின் கண்ணின் சீர்மை அறிந்து தெளிவுற்றார். அப்படி கண்ணழகின் வாசி அறிந்தவர் கண்ணனின் கண்ணழகின் ஆகரம் இயம்புவது மிக ரசம்.

தாசன் 🙏 - வானமாமலை பத்மனாபன் - 16-12-2018

===

## *திருப்பாவையில் ஐதிஹ்யங்கள்* 5

*இரண்டாம் பாசுரம்*

வையத்து வாழ்வீர்காள்...

|

*இப்படி வ்யதிரேகத்தில் முடியும்படியானவன் மோக்ஷபலம் பெறாதொழிவானன்*

நஞ்சீயர் *இவனுக்கு நரகமே, பெருமாள் ஆன்ருஸ்ம்ஸ்யத்தாலே ஸ்வர்கஸ்தனானான்*

பட்டர் - ஆறாயிரப்படி.

எம்பெருமானுடன் இருப்பே வையத்தில் வாழ்வு. இடைச்சியர்கள் இதைப் பெற்றார்கள். தசரத சக்ரவர்த்தி பிரிவால் இழந்தார். அவருக்கு மோக்ஷம் கிடைக்கவில்லை. சுவர்க்கமே கிடைத்தது.

ஸ்ரீ நஞ்சீயர் பட்டரிடம் இதற்கு காரணம் கேட்க, தசரத சக்ரவர்த்தி, தான் கொடுத்த வாக்கை நிறைவேற்ற வேண்டும் என்ற சாமானிய தர்மத்துக்கு முக்கியத்துவம் அளித்தார். சாக்ஷாத் விசேஷ தர்மமான பெருமாளை காட்டுக்கு அனுப்பத் துணிந்தார். *ராமோ விக்ரஹவான் தர்ம:*

இப்படி சாக்ஷாத் தர்மத்தை விட்டதால் அவருக்கு நரகமே சித்திக்க வேண்டியது. பெருமாளின் காருண்யத்தால் ஸ்வர்க்கலோகம் அடைந்தான். இதனால், எம்பெருமானே விசேஷ தர்மம். அது ஏற்றம் என்றபடி.

||

*செய்யாதன செய்யோம்* .. .

*ஆழ்வான் எங்கள் பூருவர்கள் தேவதாந்திர பஜனம் பண்ணாமையாலே*

என்றாராம். ஆறாயிரப்படி.

*எங்கள் பூருவர்கள் செய்து போந்திலர்* என்றார் .. நாலாயிரப்படி.

அதாவது எம்பெருமான் ஸ்ரீமன் நாராயணைத் தவிர வேறு தெய்வங்களைத் தொழாததேன் என்று ஸ்ரீ கூரத்தாழ்வானை சிலர் கேட்க, எங்கள் முன்னோர்கள், பெரியோர்கள் இப்படி வேறு தெய்வத்தைத் தொழுவதில்லை என்று பதில் கொடுத்தாராம்.

வேறு தெய்வத்தைத் தொழுவது *செய்யத்தகாத செயல்* என்னும்படி.

தாசன் 🙏 - வானமாமலை பத்மனாபன் - 17-12-2018

===

## *திருப்பாவையில் ஐதிஹ்யங்கள்* 6

*மூன்றாம் பாசுரம்*

ஓங்கி...

*ஸ்ரீவைகுண்டத்தில் இருக்கும் போது ஸம்சாரிகள் இழவுக்குத் திருவுள்ளம் நொந்திருக்கும்* என்று பட்டர் அருளிச்செய்ய,

*...நிரதிசய ஆனந்தனாய் இருக்கிற ஸர்வேஸ்சரனுக்கு ஒரு இழவு உண்டோ!*

*வ்யஸனேஷு மனுஷ்யாணானி* என்பது குணப் ப்ரகரணமோ தோஷப் ப்ரகரணமோ என்றருளிச் செய்தார்.

அதாவது, பரமபதத்தில் இருக்கும் போது எம்பெருமானுக்கு இந்த லீலா விபூதியில் இருக்கும் ஸம்சாரிகள் இன்னும் தன்னை வந்து அடையவில்லையே என்று எம்பெருமான் இரங்குவானாம்.

பரிபூரண ஆனந்த மயன், கல்யாண குணம் மட்டும் பொருந்தியவன், எவ்வித தோஷமும் இல்லா ஈஸ்வரனுக்கு இப்படி ஒரு குறை இருப்பது தோஷம் இல்லையோ என்பது கேள்வி.

சம்சாரிகள் குறையும் துக்கமும் அவர்கள் வினைப்பயனால் உண்டாகின்றன.

எம்பெருமானுடைய இந்த துக்கம் காருண்யத்தால் ஏற்படுவதால் இது குணமே ஆகும் என்றபடி.

II

பேர்பாடி ...

*திரு நாமம் சொல்லுகைக்கு அதிகாரி சம்பத்து வேண்டாவோ* என்று நஞ்சீயர் பட்டரை கேட்டருள *யோக்கியன் ஆக இருந்தால் இருந்தபடி சொல்லுகிறான், அயோக்கியன் ஆனால் யோக்கியதை சம்பாதிக்க வேண்டா*

அதாவது ஓங்கி வளர்ந்த உத்தமன் பேர்பாடி என்று எம்பெருமான் திருநாமத்தை சொல்லுவதற்கு தகுதி வேண்டாமா ? என்று வினா. இதற்கு பட்டர் உத்தரம் தெரிவிக்கையில் ஒருவனுக்கு தகுதி இருந்தால் அப்படியே திருநாமத்தை உச்சரிக்கலாம். இல்லையேல் விசேஷமாக தகுதி தேட வேண்டாம். திருநாமம் சொல்வதற்கு தனியாகத் தகுதி ஏதும் தேவை இல்லை என்றபடி.

தாசன் - வானமாமலை பத்மனாபன் - 18-12-2018

===

## *திருப்பாவையில் ஐதிஹ்யங்கள்* 7

நான்காம் பாசுரம்

ஆழ்வானை ஒருவன் தேவதாந்திரங்களை நீங்கள் கண்டால் பண்ணும் ஆசாரம் என் என்று கேட்க, ஆழ்வான் *சாஸ்திர விரோதமாக கேளாதே கொள்ளாய் தேவதைகள் உங்களை கண்டால் பண்ணும் ஆசாரம் என்* என்று கேளாய் என்றார்.

அதாவது மற்ற தேவதைகளைக் கண்டால் ஸ்ரீவைஷ்ணவர்கள் எப்படி நடந்து கொள்வார்கள் என்ற கேள்வியே சாஸ்திர விரோதம். அந்த தேவதைகள் ஸ்ரீவைஷ்ணவர்களை கண்டால் எப்படி நடந்து கொள்ளும் என்றல்லவா கேட்க வேண்டும்.

அதாவது தேவதாந்திரங்கள் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு கட்டுப்பட்டவர்கள் என்றபடி.

தேவதாந்திரங்கள் = இதர தெய்வங்கள்.

II

ஊழி முதல்வன் உருவம்போல்

*நாச்சியார் விழி விழிக்க ஒண்ணாதா போலே*

மழைக்கால மேகங்கள் ஊழி முதல்வன் உருவம்போல் மெய் கறுத்து மழை பொழிய வேண்டும் என்பது ஆழி மழைக் கண்ணா பாசுரத்தில் உள்ள சொற்கள்.

எம்பெருமானுடைய நிறத்தை கொள்ளலாமே ஒழிய, அவனுடைய குணத்தை ஒருநாளும் கொள்ள முடியாது என்றபடி.

ஸ்ரீரங்கத்தில் திருஅத்யயன உற்சவத்தில் பகல் பத்து கடைசி நாளில் நம்பெருமாளுக்கு நாச்சியார் திருக்கோலம் சாற்றுவதுண்டு. அப்போது ஸ்ரீ பட்டர், நாச்சியார் திருக்கோலம் பெருமாளுக்கு மிகவும் பொருத்தமாக இருந்தாலும் அந்தக் கருணை பொங்கும் விழி நாச்சியாருக்கு மட்டுமே ஒக்கும் என்று அருளிச் செய்த வார்த்தை இங்கு நினைக்கத்தக்கது. அதாவது எப்படி பிராட்டிக்கு காருண்யமே வடிவெடுத்த கண்கள் இருக்கும்; அது எம்பெருமான் விஷயத்தில் பொருந்தா.

அதுபோல் மேகம் எம்பெருமான் நிறத்தை கொள்ளலாமே தவிர குணத்தை ஒரு போதும் கொள்ள முடியாது என்றபடி

தாசன் 🙇 - வானமாமலை பத்மநாபன் - 19-12-2018

===

## *திருப்பாவையில் ஐதிஹ்யங்கள்* 8

*ஐந்தாம் பாசுரம்*

யமுனைத்துறைவன் ....

*கம்ஸ பயத்துக்கு அஞ்சி ஒளிக்கவந்து சேர்ந்தாரைச் சொல்லுமாபோலே சொன்னபடி பாரிர்* - ஆறாயிரப்படி.

யமுனைத்துறைவன் என்று கண்ணனை வெளிப்படையாகச் சொல்லாமல் பொதுவாகச் சொல்வதற்கு ஒரு காரணம் இங்கு ஸ்ரீ பட்டர் தெரிவிக்கிறார். அதாவது, கம்ஸன், கண்ணன் இருக்கும் இடத்தை தேடிக் கொண்டிருக்கிறான். அதை வெளிப்படையாகச்

சொன்னால் ஆபத்து. அதனால், பொதுவாக மறைமுகமாக *யமுனைத்துறைவன்* என்று சொன்னதாக ஸ்ரீ பட்டர் திருவுள்ளம்.

இங்கு அத்தத்தில் பத்தாம் நாள் தோன்றிய அச்சுதன் என்று திருவோணமும் சரி, ரோகிணியும் சரி, ஹஸ்த நட்சத்திரத்துக்கு முன்னும், பின்னும் பத்தாவது நட்சத்திரமாக வருவதால் அங்கும் இப்படி பொதுப்படையாகச் சொன்ன ஸ்ரீ பெரியாழ்வார் வார்த்தை இங்கு நினைக்கத்தக்கது.

தாமோதரனை ...

*பணைகளால் தாவினவாறே உடைநழுவ தழும்பைக் கண்டு இடைச்சிகள் சிரித்தார்கள். அத்தழும்பு தோன்றாமைக்காக நம்பெருமாள் கணையம் மேல் சாத்து சாத்துகிறது* என்று ஸ்ரீ நஞ்சீயர் .. அருளிச் செய்தது. ஆறாயிரப்படி.

அதாவது கண்ணபிரானை யசோதைப்பிராட்டி உரலில் கட்டிய தழும்பு இடையில் உண்டானதால் தாமோதரன் என்று ஆயிற்று (தாமம் .. கயிறு; உதரம் .. வயிறு).

அதை மறைக்க கண்ணன் மேலாடை இட்டுத் திரிவான். ஆயினும், அது மரம் ஏறுகையில் நழுவும்போது இடைச்சியர்கள் அதைக் கண்டு நகைப்பார்கள். இதனாலேயே, ஸ்ரீ நம்பெருமாளுக்கு இடையில் தழும்பு தெரியாமல் இருக்க மேல் சாத்து சாத்துவார்கள் என்று ஸ்ரீ நஞ்சீயர் வார்த்தை.

தாசன்🙇 - வானமாமலை பத்மநாபன் - 20-12-2018

===

## *திருப்பாவையில் ஐதிஹ்யங்கள்* 9

*ஆறாம் பாசுரம்*

புள்ளும் சிலம்பின காண் ...

இவ்விடத்திலே பிள்ளைப் பிள்ளையாழ்வான், *பகவத் ஸமாஶ்ரயணத்துக்கு அனுகூலமான காலத்தை ஸூசிப்பிக்கின்ற பக்ஷி நாதமல்லது ஆத்மாவுக்கு உத்தேசமில்லை* என்று அருளிச் செய்வர்.

அதாவது பொழுது விடிந்ததற்கு அடையாளமாக பறவைகளின்

ஒலியைக் கொண்டு ஸ்ரீ ஆண்டாள் நாச்சியார் தெரிவிப்பதை திருப்பாவையில் நோக்கலாம்.

இப்படி நாம் சிற்றஞ்சிறுகாலை எழுந்து கண்ணனை, எம்பெருமானை ஆஶ்ரயிக்க உகந்த வேளையை நமக்கு உணர்த்தும் பறவைகளின் ஒலி மிகவும் உகந்தது என்றபடி.

இங்கு, "சேர்ப்பார்களைப் பக்ஷிகளாக்கி ஞான கர்மங்களை சிறகாக்கி " என்னும் ஆசார்ய ஹ்ருதய சூத்திரம் நினைக்கத்தக்கது. எம்பெருமானிடத்தில் நம்மைச் சேர்க்கும் ஆசாரியர்களை இந்த பக்ஷிகள் உணர்த்தும் என்றபடி.

புள்ளும் சிலம்பின காண்..

*ஆண்டாள் பிறந்த ஊரில் பக்ஷிகளுக்குத்தான் உறக்கம் உண்டோ!* என்று ஆச்சான் பிள்ளை நாலாயிரப்படி.

அதாவது எம்பெருமானை அணுகுவதற்கு ஏற்ற காலம் விடியற்காலம். அதைத் தெரிவிக்கும் பறவைகள் விடியற்காலையில் கண்ணுறங்காமல் விழித்துக் கொண்டிருப்பது, அவையும் ஸ்ரீ ஆண்டாளைப்போல் உறங்காமல் இருக்கின்றன என்றபடி!

தாசன் 🙇 - வானமாமலை பத்மனாபன் - 21.12.2018

===

***திருப்பாவையில் ஐதிஹ்யங்கள்* 10**

ஏழாம் பாசுரம் ।

ஆட்கொண்டவில்லி ஜீயர் எழுந்தருளா நிற்கச் செய்தே, நஞ்சீயர் தண்டனிட்டு நிற்க, "*பகவத் விஷயத்தில் ருசி நமக்கு பிறந்ததில்லை காணும்"* என்று அருளிச் செய்ய

"உம்மைப்போல் ஆசார்யர்வான்கள் உண்டோ! இங்ஙனே அருளிச் செய்வான் என்", என்ன

*பகவத் விஷயத்தில் மெய்யே ருசி உண்டு என்று இருக்கையாவது பாகவதர்களைக் கண்டால் உகக்கும் அன்று காணும்*

.. என்றருளிச் செய்தார்.

நாலாயிரப்படி.

ஆண்டாள் நாச்சியார் ஆறாம் பாசுரம் முதல் 15ம் பாசுரம் வரை பல பாகவதப் பெண்களை எழுப்பி கூடியிருந்து குளிர அழைக்கிறாள். இதிலிருந்து பாகவதப் ப்ரபாவம் வெளிப்படுகிறது.

ஒரு முறை நஞ்சீயர் ஆட்கொண்டவில்லி ஜீயரை வணங்கி நிற்கையில், ஆட்கொண்டவில்லி ஜீயர், உண்மையாக எம்பெருமான் விஷயத்தில் ஈடுபாடு உடையவன் தான் இல்லை என்று தெரிவிக்க, ஸ்ரீ நஞ்சீயரும், இப்பேர்ப்பட்ட உத்தமமான நீர் இப்படி சொல்வதேன்? என்று கேட்க, அதற்கு எம்பெருமானுடைய அடியவர்களான பாகவதர்களைக் கண்டால் என்றைக்கு உகப்பு ஏற்படுகிறதோ அன்றுதான் எம்பெருமானுடைய விஷயத்தில் ஈடுபாடு பூர்த்தியாகும் என்று பதிலிறுத்தார்.

இங்கு ஸ்ரீ. உ.வே. டாக்டர் எம். ஏ. வேங்கடக்ருஷ்ணன் ஸ்வாமியின் குறிப்பு நோக்கத்தக்கது.

ஆட்கொண்டவில்லி ஜீயரை தண்டனிட்டு நஞ்சீயர் நிற்க, பதிலுக்கு அவரை ஆட்கொண்டவில்லி ஜீயர் வணங்கவில்லை. நஞ்சீயர் என்னும் ஸ்ரீவைஷ்ணவ அடியாரை தாம் வணங்காததால் தனக்கு பகவத் விஷயத்தில் உண்மையான ஈடுபாடு இல்லை என்று அவர் சொன்னதாகக் கொள்ளலாம் என்பது மிகவும் பொருத்தமாக உள்ளது.

II

*விடிவோர மாளிகையில் சென்று எழுப்புவாரும் கவி சொல்லுவாரும், வம்சாவளி ஒதுவாரமாக எழுந்திருக்க கடவ, இவர் பக்ஷிகளுக்கு முன்னே உணரும்படி ஆவதே என்ன தர்மஹானி* என்று ஆய்த்தான் அருளிச் செய்தார் .. ஈராயிரப்படி.

அதாவது பறவைகள் ஒலியைக் கொண்டு திருப்பாவையில் விடிந்தமைக்கு அடையாளம் உணர்த்தப்படுகிறது. இப்படி சக்கரவர்த்தித் திருமகனான ஸ்ரீராமபிரான் காட்டிலே எழுந்தருளியிருக்கும்போது காலை விடிந்த அடையாளம் பறவை ஒலிகொண்டு தெரிவிக்கப்படுகிறது. அப்போது ஆய்த்தான் என்பவர், ராஜாவான ஸ்ரீராமபிரான் காலையில் எழுந்திருக்கையில் இனிய பாடல்கள் பாடுவார்களும், பல்லாண்டு பாடியும், அவர் குலப் பெருமையயென்ன, வம்சம் என்ன என்று சொல்லி எழுப்ப வேண்டி

இருக்க, இப்படி காட்டிலே பறவை ஒலிக் கொண்டு எழுந்திருக்க வேண்டி ஆகிவிட்டதே! என்று வருத்தப்பட்டாராம்.

தாசன்🙏 - வானமாமலை பத்மநாபன் - 22-12-2018

===

## *திருப்பாவையில் ஐதீகங்கள்* 11

எட்டாம் பாசுரம்

*முலை எழுந்தார் படி மோவாயெழுந்தார்க்குத் தெரியாதிறே* பாவாய் .. ஆறாயிரப்படி.

அதாவது ஸ்ரீ நம்மாழ்வார் திருமங்கையாழ்வார் மற்றைய ஆழ்வார்கள், எம்பெருமான் மீது மிகுந்த ப்ரேமம் மிகும்போது அது பெண்பேச்சாக மாறி அனுபவம் செல்கிறது.

ஞானத்தில் தன் பேச்சு ப்ரேமத்தில் பெண் பேச்சு என்னும் ஸ்ரீ நாயனாரின் சூத்திரம் காண்க. அதாவது ஆழ்வார்கள் பக்திப் ப்ரேமம் மிகவும் போது அது பெண் பேச்சாக உருமாறுகிறது; பெண் ஆடை உடுத்து அனுபம் மாறுகிறது. இதற்கு மாறாக திருப்பாவையில் ஆண்டாள் நாச்சியார் இடைச்சி பாவனையில் இயல்பாகவே ப்ரேமம் கொண்டு பெண் பேச்சாக அமைவதால், திருப்பாவையில் இந்த ப்ரேமமும் பக்தியும் பெண்களுகே இயல்பாக பக்தி ப்ரேமம் இழைந்தோடுவது உணரலாம் என்றபடி.

(முலை எழுந்தார் .. பெண்கள்.. மோவாய் எழுந்தார்... ஆண்கள்)

*பட்டர் விடியும் தனையும் கண்வளரந்தருள, சிஷ்யர்கள் எல்லாரும் திரு வாசலிலே வந்திருக்குமா போலே எழுந்திராய்* - ஈராயிரப்படி

ஆண்டாள் நாச்சியார் பல கோபிகைகளுடன் தான் முன்னே எழுந்து பல பெண்களை எழுப்புகிறார். அப்படி இந்த இடத்தில் ஒரு பெண் பிள்ளைகள் அவளை எழுப்புவது இப்படி திரளாக வந்து எல்லோருக்கும் பெரும்பேறு என்னும்படி இருக்கும் என்பதை தெரிவிக்க எப்படி ஸ்ரீ பராசர பட்டரை காலையில் எழுப்ப அவர் எழுந்துகொள்வதற்கு முன்னே சிஷ்யர்கள் பலரும் திரளாக எழுப்புவதற்கு வந்து இருப்பதுபோல் என்று அந்த பெரும்பேற்றை இதற்கு ஒப்புமை காட்டப்படுகிறது.

தாசன்🙏 - *வானமாமலை பத்மநாபன் - 23-12-2018*

*===*

## *திருப்பாவையில் ஐதிஹ்யங்கள்* 12

ஒன்பதாம் பாசுரம்

கண்வளரும் ... ஆறாயிரப்படி, நாலாயிரப்படி

பட்டருக்கு சிலர் 'தொண்டனூர் நம்பி திருவடி சார்ந்தார்' என்று விண்ணப்பஞ்செய்ய; 'அவர், ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு அடிமை செய்து போந்தபடிக்கு ' திருநாட்டுக்கு நடந்தார்' என்று சொல்ல வேண்டாவோ! என்று அருளிச்செய்தார்.

தொண்டனூர் நம்பி என்பவர் இறைவனடி சேர்ந்தார் என்பதைக் குறிக்க திருவடி தேர்ந்தார் என்று சொல்ல, இப்படி அடியார்களுக்குத் தொண்டு செய்யும் பாகவதர் சென்று சேருமிடமான அடியார் நிலாகின்ற வைகுந்தம் என்னும் நித்ய சூரிகள், முக்தர்கள் இருக்கும் இடத்தை இட்டு - திருநாட்டுக்கு நடந்தார் என்று அல்லவா சொல்ல வேண்டும், என்றாராம்.

நஞ்சீயர் பகவத் கைங்கரியத்யில் ஈடிபாடுவுடையவர்கள் விஷயத்தில் திருவடி சார்ந்தார் என்றும், பாகவத கைங்கர்ய விஷயத்தில் ஈடுபாடுடையவர்களை திருநாடு எழுந்தருளினார் என்றும், ஆசார்ய கைங்கர்யபரர் விஷயத்தில் ஈடுபாடுடையவர்களை ஆசார்யன் திருவடி சேர்ந்தார் என்றும், வ்யவஹாரங்கள்.

# II

ஆழ்வான் ஹிதாம்ஸத்துக்கு ஒரு ஸ்ரீவைஷ்ணவனுடைய க்ருஹயாத்திரையை அனுசந்திக்க வேண்டும் என்றாப்போலே, இவர்களும் இவளுடைய மாளிகையிலழகை அனுபவிக்கிறார்கள்.

தூமணி மாடம் ..

தூமணி மாடம் என்று அந்த கோபிகையை எழுப்புபவர்கள் அவளின் க்ருஹத்தின் அழகை ரசிப்பது, ஸ்ரீவைஷ்ண்ஷ்வ சம்பந்தம் பெற்ற க்ருஹத்தை, அதன் அழகை நெஞ்சினால் நினைத்தால் போதும் அடியார்கள் ஸம்பந்த்தால் உயர்வே என்றபடி.

தாசன் – 🙏 - வானமாமலை பத்மனாபன் - Dated 24-12-2018
===

## *திருப்பாவையில் ஐதிஹ்யங்கள்* 13

பத்தாம் பாசுரம்

*எம்பெருமானாரைப் போலே*

அருங்கலமே ... நாலாயிரப்படி

நோற்றுச் சுவர்க்கத்தில் எழுப்பப்படும் பெண் பிள்ளை மிகவும் ஸ்ரேஷ்டமானவள் என்றபடி.

ஒரு ஹாரத்துக்கு கல் பதித்தார்போல், தலைவியாய், ப்ரதானமாய் விளங்குபவள் என்றபடி.

இங்கு எம்பெருமானாரைப் போலே என்பது, எம்பெருமானாரும் அவர் திருமுடி சம்பந்தம் பெற்ற முந்தைய ஆசார்யார்கள் என்ன, திருவடி சம்பந்தம் பெற்ற பிந்தைய ஆசார்யர்களில் நடுநாயகமாய் விளங்கியது போலே என்றபடி.

குறிப்பு: ..
இங்கு இந்த வார்த்தை வ்யாக்கியானகர்த்தாவின் கருத்து போல் இருப்பதால் ஸ்ரீ ஆய் ஜநந்யாசார்யரின் வார்த்தையாக கொள்ளலாம்.

தாசன் 🙇 - வானமாமலை பத்மனாபன் - 25-12-2018
===

## *திருப்பாவையில் ஐதிஹ்யங்கள் 14*

பாசுரம் 12

கனைத்திளம்

விடுகையும் உபாயம் அல்ல; பற்றுகையும் உபாயம் அல்ல: விடுவித்துப் பற்றுவிக்குமவனே உபாயம்

பிள்ளைத் திருநறையூர் அரையருக்கு நஞ்சீயர் வார்த்தை - நாலாயிரப்படி.

"ஸர்வதர்மான் பரித்யஜ்ய மாம் ஏகம் சரணம் வ்ரஜ" ....

எல்லா தர்மங்களையும் விட்டு என்னைப் பற்று என்றான் ஸ்ரீ கண்ணபிரான், திருத்தேர்தட்டிலே.

அவனை அடைதற்கு எல்லாவற்றையும் விடுதல் வழியா?அல்லது அவனைப் பற்றுதல் வழியா?

விடுவித்துப் பற்றுவிக்குமவனான எம்பெருமானே உபாயம் என்றபடி. நாம் செய்யும் விடுதலோ, அவனைப் பற்றுதலோ வழி இல்லை.

இதை செய்விக்கும் அவனே அவனை அடைவிக்கும் வழி என்றபடி.

"என்னைத் தீமனம் கெடுத்தாய்" என்று விடுவிப்பவன் அவனே;

"இசைவித்தென்னை உன் தாளிணை கீழ் இருத்தும் அம்மானே", என்று பற்றுவிப்பவனும் அவனே.

எம்பெருமானே உபாயம் என்றபடி.

ஆசார்ய ஹ்ருதயம் 105 முதல் 115 வரை உள்ள சூர்ணிகைகளில் மிகத் தெளிவாகக் காணலாம்.

தாசன் 🙏 - வானமாமலை பத்மனாபன் - 27-12-2018
===

## *திருப்பாவையில் ஐதிஹ்யங்கள்* 15

பாசுரம்..13

*நன்னாள் .. நாலாயிரப்படி

ஆண்டாள், திரு ஏகாதசி பட்டினி விட்டு, பட்டரை "தீர்த்தம் தாரும்" என்ன, *இப்பெரிய திருநாளில் இதொரு திரு ஏகாதசி எங்ஙனே தேடிப்பிடித்து எடுத்துக் கொண்டிகோள்*" என்றருளிச்செய்தார்

கூரத்தாழ்வானின் தேவியார் கூரத்தாண்டாள். திருஅத்தியயன உத்சவத்தில் (இராப்பத்து , பகல் பத்து மஹோத்ஸவம்) ஊடே வரும் ஏகாதஸி அன்று உபவாசம் இருந்து அடுத்த நாள் பட்டரிடம் பெருமாள் தீர்த்தம் கேட்க, அவர் "இப்பேர்பட்ட பெரிய திருவத்தியன உத்ஸவம் கோலாஹலமாக நடந்துகொண்டிருக்கையில், இந்த ஏகாதசியை நினைவில் வைத்து அனுஷ்டித்தீரே!" என்றாராம்.

அதாவது, பகவத் கைங்கர்யம், பகவத் அனுபவம் செல்கையில் சாமான்ய தருமத்தை விட எம்பெருமானான விசேஷ தருமம், பகவத் அனுபவம் சிறந்தது என்று கொள்ளலாம்.

மேலும், திருஅத்தியயன உத்ஸவம் இருபது நாட்களுக்கும் மேலாக இன்றும் தொடர்ந்து நடக்கிறது.

இதை அனுபவிக்க தேஹத்தில் சக்தி வேண்டும் என்றபடி.

ஆக, பகவத் அனுபவத்துக்கு தடையான, பட்டினி நாளைத் தேடி எடுத்தீர்களே என்னும் பொருள்பட ஸ்ரீ பட்டர் கேள்வி.

இது விஷயமாக டாக்டர் எம். ஏ. வேங்கடக்ருஷ்ணன் ஸ்வாமியின் குறிப்பு பொருத்தமாக உள்ளது.

காரணம் விசேஷ தர்மமான எம்பெருமான் பகவத் அனுபவம் சாமானிய தர்மமானவற்றை விட சிறந்தது என்றபடி.

இப்படி பகவத் அனுபவம் நடந்து கொண்டிருக்கையில் உணவு பற்றி, அதை விடுத்து பட்டினி இருப்பது பற்றி நினைவு எப்படி வந்ததோ என்றும் கொள்ளலாம்.

**தாசன், - வானமாமலை பத்மனாபன்** - 27-12-2018
===

## *திருப்பாவையில் ஐதிஹ்யங்கள்* 16

பாசுரம் .. 14

*தாமஸப் ப்ரக்ருதிகளைச் சொல்லுகிறது* எம்பார்.

*தம: ப்ரசுரர்கள் உணர்ந்தார்கள்* என்று சொல்லியோ எழுப்புவது? என்று அவள் நினைத்திருக்கும்

*ஸத்வ நிஷ்டரான ஸந்யாஸிகளைச் சொல்லுகிறது* என்று திருமலை நம்பி.

செங்கல் பொடிக் கூறை .... ஆறாயிரப்படி

விடிந்தமைக்கு அடையாளமாக, காவி வஸ்த்ரம் உடுத்தி துறவிகள் , வெண்மையான பற்களுடன் காலை தங்கள் தங்கள் கோவிலுக்குச் செல்கினர், என்று இப்பாசுரத்தில் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் துறவிகள் எப்பேர்பட்டவர்கள் என்று ஸ்ரீ எம்பார், ஸ்ரீ திருமலை நம்பியின் கருத்துக்கள் இங்கு விஷயம்.

*ஸ்ரீ எம்பார்* நிர்வாஹம் .. இத்துறவிகள் உண்மையான துறவிகள் அல்ல. இரவெல்லாம் கேளிக்கையில் ஈடுபட்டு காலை துறவி வேஷம் பூணும் வேஷதாரிகள். இவர்களே எழுந்துவிட்டார்கள் இன்னும் இந்த கோபிகை எழுந்திருக்கவில்லயே என்னும் நோக்கு.

*ஸ்ரீ திருமலை நம்பி*...

உள்ளே எழுப்பப்படும் அடியவள் ஸ்ரீவைஷ்ணவள். கண்ணபிரானிடம் மிகவும் ப்ரேமம் உடையவள். அவளை எழுப்புவதற்கு வேஷதார பொய்த் துறவியைக் கொண்டு அடையாளம் சொல்லுவது தகாது.

இத்துறவிகள் உண்மையான, ஸத்வகுணமுடையவரகளைக் குறிக்கும் என்றபடி

தாசன் 🙏 - வானமாமலை பத்மனாபன் - 29-12-2018
===

## *திருப்பாவையில் ஐதிஹ்யங்கள் 17*

பாசுரம் ..15

நீ ஒருவர்க்கும் விரோதி இல்லை. நீ புக்குத் திருவடி தொழு என்ன, ஆழ்வான் வார்த்தையை நினைப்பது.

உனக்கென்ன வேறுடையை ..... மூவாயிரப்படி.

எல்லே இளங்கிளியே பாசுரத்தில், ஒரு பெண்பிள்ளை தான் மட்டும் தனியாக எம்பெருமானை அனுபவிக்கலாமா என்னும் பொருள்பட .. உனக்கென்ன வேறுடையை .. என்பதற்கு இங்கு ஸ்ரீ கூரத்தாழ்வான் வார்த்தை நினைக்கத்தக்கது.

கிருமி கண்ட சோழனின் துன்புறுத்தலால் ஆழ்வான் கண்ணிழந்து , ஆனாலும் ஸ்ரீ நாராயண பரத்துவத்தை நிலைநாட்டினார். எம்பெருமானாரும் மேல்நாட்டுக்கு எழுந்தருளி இருந்த காலத்தில்,

கோபமடைந்த சோழ அரசன் ஸ்ரீ ராமானுஜ ஸம்பந்த பெற்ற எவரையும் திருவரங்கம் கோவிலில் நுழைய தடை விதித்தான். ஆழ்வான் பெருமாளை சேவிக்கச் சென்ற போது,

நீர் ராமானுஜருடைய சிஷ்யர் ஆனாலும், நீர் யாருக்கும் விரோதி இல்லை. அதனால், நீர் சென்று சேவிக்கலாம் என்று அனுமதி கொடுத்தாலும், ஆழ்வான் தான் விரோதி இல்லை, யாருக்கும் துன்பம் விளைக்காதவர் என்று பெருமாளை சேவிக்க இயன்றாலும், தம் ஆசார்ய சம்பந்தம் அடியாக அன்றோ இது அமைய வேண்டும்; அதனால், ஸ்ரீ ராமானுஜரின் சிஷ்யர் என்றே தன்னைக் கருதிக் கொண்டு கோவிலுக்குச் செல்லாமல் இருக்கிறேன் என்றாராம்.

.

இங்கு ஆசார்ய ஸம்பந்தம் எம்பெருமான் ஸம்பந்த்தை விட

உகந்தது; எம்பெருமானை கூடி இருந்து குளிருதல், சூழ்ந்திருந்தேத்துததல் சாலச் சிறந்ததாம்.

தாசன் 🙏 - வானமாமலை பத்மனாபன் - 30-12-2018
===

## *திருப்பாவையில் ஐதிஹ்ங்கள்* 18

பாசுரம் .. 16

நாலாயிரப்படி அவதாரிகை.

திருவணந்தபுரத்திலே ஒரு பாகவதரோடே மூன்று பிள்ளைகள் ஸ்ரீ ராமாயணம் அதிகரித்துச் சொன்ன வார்த்தையை நினைப்பது.

ஒரு ஸ்ரீவைஷ்ணவரின் மூன்று குமாரர்கள் ஸ்ரீ ராமாயணம் கற்றவுடன், அதன் தாத்பர்யத்தை, அதாவது தேர்ந்த கருத்தைச் சொன்னதை ஈண்டு நினைப்பது.

ஸ்ரீ ராமாயணத்துக்கு தாத்பர்யமாகச் சொன்னது

முதல் பிள்ளை:

மாத்ரு பித்ரு ஸிக்ஷை ஸ்ரீ ராமாயண ஸாரம் என்றானாம்..

அதாவது, தாய் தந்தையருக்கு கைங்கர்யம் பண்ணுவதே ஸ்ரீ ராமாயணத்தில் நோக்கு என்றபடி.

இரண்டாம் பிள்ளை:

"ஸரீரம் எடுத்துப் பிறப்பது பொல்லாதது; ஆகையால் அதை அகற்றும் வழியை ஆராய வேண்டும்" என்றானாம்.

மூன்றாவது பிள்ளை:

*சக்கரவர்த்தித் திருமகனின் கருணை உண்டானால் ஒழிய எவராலும் பிழைக்க வழியில்லை* என்றானாம்.

அதாவது ஸ்ரீராமாயணத்தில், தாய் தந்தை கைங்கரியம் சாமான்ய தர்மம்.

இரண்டாம் பிள்ளை சொன்னது இந்த பிறவி என்னும் துன்பத்திலிருந்து நீங்கும் வழியை ஆராய்வது. இன்னும் விசேஷம் என்றாலும், அந்த வழி ஸ்ரீ ராமாயணத்தில் ஸ்ரீராமபிரானால்

காட்டப்பட்டிருக்கிறது .
அதாவது எதிரியான ராவணப் பையல் இடத்திலும் கருணை கொண்டு அவனையும் ரக்ஷிக்க அவகாசம் பார்த்துக்கொண்டிருந்தார் பெருமாள்.
ஸ்ரீ விபீஷணாழ்வான் பெருமாளிடம் சரணாகதி பண்ணிய ராவணனே வந்தாலும் அவனை ஏற்றுக்கொள்ளலாம் என்று பெருமாள் திருவுள்ளம் இங்கு நோக்கத்தக்கது.

இறந்த பிறகும் அவனுக்கு நன்மை செய்ய வேண்டும் என்று, அவன் இருக்கும் காலத்தில்தான் அதை அவன் தடுக்கும் சக்தி இருந்தது; அவன் இறந்த பிறகு அவனுக்கு நன்மை ஏற்படுவதை அவன் தடுக்க முடியாது அவனுக்கு இறுதிச் சடங்கு செய்வதற்கு ஸ்ரீ விபீஷணாழ்வான் மறுத்தபோது இந்த வார்த்தையை ஸ்ரீராமபிரான் தெரிவித்துள்ளது இங்கு நினைக்கத்தக்கது .

**மூன்றாவது பிள்ளை** சொன்ன தாத்பரியம் சக்கரவர்த்தித் திருமகனான பெருமாளின் க்ருபையே நமக்கு காரணம் என்றபடி.

இதுவே இராமாயணத்தின் தேர்ந்த கருத்து என்று அவனையே அங்கீகரித்தார் அந்த ஸ்ரீவைஷ்ணவர்.

தாசன் 🙏 - வானமாமலை பத்மநாபன் – 31-12-2018
குறிப்பு ..
இதை வார்த்தாமாலையில் 364 வார்த்தையில் காணலாம்.

===

## *திருப்பாவையில் ஐதிஹ்யங்கள் 19*

பாசுரம் 18 - உந்து மதகளிற்றன் ....

சீரார் வளையொலிப்ப வந்து திறவாய் மகிழ்ந்தேலோர் எம்பாவாய்

எம்பெருமானார் உகந்த பாட்டு

எம்பெருமானார் இந்த பாட்டை அனுசந்தித்துச் செல்லும் வேளையில், ஸ்ரீ பெரிய நம்பி திருவாசல் கதவை ஸ்ரீ பெரிய நம்பியின் குமாரத்தி அத்துழாய் திறக்க, எம்பெருமானார் அவளை நப்பின்னை என்று நினைத்து தண்டனிட, அவளும் திடுக்குற்று நம்பியிடம் விண்ணப்பிக்க, ஸ்ரீ பெரியநம்பி 'உந்துமத களிற்றன்' அனுசந்தானமோ! என்றாராம்.

அதாவது எம்பெருமானாருக்கு இந்த உந்து மதகளிற்றன் என்ற பாசுரம் மிகவும் உகந்தது என்றபடி.

கதவைத் திறந்த போது இப்பாசுராத்தில் பாடப்பெற்ற நப்பின்னைப் பிராட்டி ஆகவே அவர் அப்படியே அதில் லயித்தார் என்கிறது .

ஸ்ரீ புத்தூர் க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி, தன்னுடைய பதிப்பு குறிப்பில், இது திருக்கோட்டியூர் நம்பி திருமாளிகையில்,அவர் குமாரத்தி தேவகி பிராட்டி கதவு திறந்ததாகவும் தேவகி பிராட்டியை எம்பெருமானார் தண்டனிட்டதாகவும்,

வார்த்தாமாலை, ராமானுஜ திவ்ய சரிதை, வடிவழகிய நம்பி தாஸரின் குருபரம்பரா ப்ரபாவம், போன்ற க்ரந்தங்களில் இருப்பதால் அரும்பதத்தில் கொடுத்த அத்துழாயை எம்பெருமானார் தண்டனிட்டதாக இருப்பதை ஏற்பது கடினம் என்பது போல் தெரிவித்திருக்கிறார்.

எனினும் இது வேறு வேறு சமயத்தில்; எம்பெருமானார் ஒரு முறை திருக்கோட்டியூர் நம்பி திருவாசலிலும், ஒரு முறை ஸ்ரீ பெரிய நம்பி திருவாசலிலும் முறையே நப்பின்னை பிராட்டியாக பாவித்ததாகக் கொள்ளலாம் .

தாசன் 🙇 - **வானமாமலை பத்மநாபன்** – 02-01-2019

===

## *திருப்பாவையில் ஐதிஹ்யங்கள் 20*

பாசுரம் ..19

தத்துவம் தகவன்று .. ஆறாயிரப்படி.

இங்கு பெருமாள் சரணாகத ரக்ஷகன் என்பதை தெரிவிக்கும் விதமாக ஆறாயிரப்படியில் ஒரு நிகழ்வு கோடிட்டுக்குக் காட்டப்படுகிறது.

கபோதஸ்தானீயனாகில் என்று.

ஸ்ரீ விபீஷணாழ்வான் பெருமாளை சரணம் புக வந்தபோது, ஸுக்ரீவ மஹாராஜா அதை ஆட்சேபிக்க, ஒரு பறவையால் செய்ய முடிந்ததை தான் செய்யவில்லையே என்று பெருமாள் வருத்தமுற்றாராம்.

அந்த பறவை விருத்தாந்தத்தை அங்கு பெருமாள் சுக்ரீவனுக்கு தெரிவிக்கிறார். அதாவது ஒரு வேடன் கபோதம் என்னும் பெண் பறவையை பிடிக்க, அவனும் குளிரில் நடுங்கி மரத்தின் கீழே ஒதுங்க, அந்த ஆண் பறவை தன்னுடைய பெண் பறவையை பிடித்தாலும் தன் மரத்திற்கு கீழே ஒதுங்கியதால் அவனை ரக்ஷிக்க வேண்டும் என்று பெண் பறவை புருஷகாரத்தின் பேரில் அது தன்னை மாய்த்துக் கொண்டு, அவனுக்கு இரையானது.

இப்படி ஒரு பறவையால் செய்ய முடிந்ததை கூடத் தன்னால் செய்ய முடியவில்லையே (அதாவது அடியார்களான் இந்த வானர சேனைக்கு கட்டுண்டிருக்கும் நீர்மை குணத்தால்) என்று பெருமாளின் இந்த கல்யாண குணத்தை நினைத்து ஸ்ரீ அருளாளப் பெருமாள் எம்பெருமானார், நமக்கு தஞ்சமாக இதை நினைத்துக் கொள்ளும் படி அருளிச் செய்த வார்த்தை ஈட்டில் 6 8.6 காணலாம்.

இந்த விருத்தாந்தம் நேரடியாக ஆறாயிரப்படியில்இல்லை. வ்யாக்கியானத்துக்கு இயைப இந்த நிகழ்வு நினைக்கத்தக்கது.

குறிப்பு:
இந்த விருத்தாந்தத்தை நமக்கு நினைவு கூர்ந்து உபஹரித்த ஸ்ரீரங்கம் ஸ்ரீ உ.வே. தேவராஜன் ஸ்வாமிக்கு நம் க்ருதக்ஞயதைகள்

தாசன் 🙏 - வானமாமலை பத்மநாபன் - 03-01-2019
===

## *திருப்பாவையில் ஐதீகங்கள்* 21

பாசுரம் 20

*உதார வாக்குகள் ஆகிறார் திருமங்கையாழ்வாரும் ஆளவந்தாரும், ஆழ்வானும், பட்டரும்* .. ஆறாயிரப்படி.

திருவே துயிலெழாய்.

இந்தப் பாசுரத்தில் துயில் எழுப்பும் போது எம்பெருமானுக்கும் பெருமை கூறும் போது பிராட்டி சம்பந்தத்தை சேர்த்துக்கொண்டு சொல்வது நம் ஆழ்வார், ஆசார்யர்கள் பரம்பரை இவர்கள் திருவாக்கில் இப்படி எம்பெருமானுக்கு ஸ்ரீ சம்பந்தப்பட்டு பெருமை சேர்த்தது உண்டு.

அப்படி திருமங்கையாழ்வாரும் *திருவுக்கும் திருவாகிய செல்வா* என்று பெரிய திருமொழி 7 3 1 தெரிவித்தருளினார்.

அதேபோல், ஸ்ரீ ஆளவந்தார் ஸ்தோத்திர ரத்தினத்தில் *க: ஸ்ரீய* என்று அருளிச் செய்தார்.

நம் கூரத்தாழ்வானும் *யஸ்யா கடாக்ஷணம் ஸ்ரீய. ஸ்ரீயம்* என்றும் அருளிச் செய்தது ஸ்ரீவைகுண்டகத்யத்தில்.

பட்டர் *ஸ்ரீயம் ஸ்ரீரங்கேச* என்று குணரத்திணகோசத்தில் அருளிச் செய்தாரிறே.

ஆக எம்பெருமானுக்கும் திருமகளின் சம்பந்தத்தை இட்டுப் பெருமை சொன்னவர்கள், உதாரர்கள் என்றபடி.

அதனால் உதார வாக்குகள் ஆகிறார்கள்.

தாசன் 🙏 - வானமாமலை பத்மநாபன் - 04-01-2019

===

## *திருப்பாவையில் ஐதிஹ்யங்கள்* 22

பாசுரம் 21

வள்ளல் பெரும் பசுக்கள் .. ஆறாயிரப்படி

உதார : ஸ்ந்தர்ஸயன் என்று ஆளவந்தார். அதாவது இந்த பசுக்கள் பாலை கொடுக்கும்போது மற்றவர்களுக்கு உதவுவதாக நினைத்து கொடுப்பதில்லை.
மாறாக தங்களுக்கு பேறாக கொடுக்கின்றன என்றபடி. ஒரு ப்ரதி உபகாரம் எதிர்நோக்கி கொடுப்பதில்லை. தங்களுக்கு அது ஒரு பேறாகக் கருதிக் கொடுக்கின்றன என்றபடி (உதார-ஸ்வபாவமாயிருக்கை).

ஆசாரியர்கள் ரகசியங்களை எல்லோருக்கும் கொடுத்தால் அல்லது தரிக்கமாட்டார்கள்.

விளங்கிய மேகத்தை (இராமானுச நூற்றந்தாதி-26) என்ற பதம் இங்கு நோக்கத்தக்கது.

ஆசார்ய ஹ்ருதயத்தில் மேகத்துக்கு (மேகம் பருகின ஸமுத்ர ... ஆ. ஹ்ரு 72) உட்பொருள் சொல்லுகையில், ஸ்ரீ அழகிய மணவாளப்

பெருமாள் நாயனார் "மேகம் வர்ஷிப்பது அதன் ஸ்வபாவம்". அதனுடைய வள்ளல்தனம். எதையும் எதிர்பார்த்து வர்ஷிப்பதில்லை.

அதேபோல் ஆசார்யர்கள் அர்த்தங்களை கொடுத்தல்லது தரியார்கள், என்றபடி.

இங்கு ஆளவந்தாரின் ஸ்தோத்திர ரத்தினம்-4, உதார: என்று, பராசர மகரிஷி தத்வார்த்தங்களை நமக்கு கொடுத்ததற்கு உதார: என்று கொண்டாடுகிறார் பரமாச்சாரியார் ஸ்ரீ ஆளவந்தார்.

திருவாய்ப்பாடியில் உள்ள பசுக்களும் இத்தன்மை கொண்டது என்பது இங்கு திருவுள்ளம்.

தாசன் 🙇 - வானமாமலை பத்மனாபன் - 05-01-2019

===

## *திருப்பாவையில் ஐதியங்கள்⁕ ⁕23*

பாசுரம் 22

அங்கண் இரண்டும் கொண்டு .. எங்கள் மேல் சாபம் இழிந்தேலோ .. ஆறாயிரப்படி

திங்களும் ஆதித்தியனும் எழுந்தாற்போல் அங்கண் இரண்டும் கொண்டு என்று, எம்பெருமான் தன் திருக்கண்களால் ஒரே சமயத்தில் கோபத்தையும் குளிர்ச்சியையும் எப்படி கொடுக்க முடியும் என்று ஒரு விசாரம்.

இதற்கு பட்டர் தெரிவிக்கும் அழகான விளக்கம் .

ஒரு சிங்கம் யானையோடு சண்டையிடும் வேளையிலும் தன்னுடைய குட்டிக்கு பால் உண்ணலாம்படி இருக்கும்.

அதைப்போல் அங்கண் இரண்டும் கொண்டு என்று எதிரிகளுக்குக் கனலும், அடியார்களுக்கு க்ருபையும் பொழிவான் அன்றோ! என்று சாதித்தருளினார்.

*சீற்றத்தோடு அருள் பெற்ற*

திருவாய்மொழி 3.6.6 'ல் இதே விஷயம் பேசப்படுகிறது்

அங்கு இது எம்பெருமானார் வார்த்தையாக ஈட்டு ஸ்ரீசூக்தியில் நோக்கலாம்.

இங்கு ஸ்ரீ ப்ரஹ்லாதாழ்வான்பால் க்ருபையும், ஹிரண்யன் மேல் சீற்றமும் கொண்டது நினைக்கத்தக்து.

குறிப்பு:

எம்பெருமானார் வார்த்தயைப் பின்பற்றியே ஸ்ரீ பட்டரின் சம்வாதம் என்று கொள்ளலாம்

தாசன் 🙇 - வானமாமலை பத்மனாபன் - 06-01-2019
===

## *திருப்பாவையில் ஐதீஹ்யங்கள்* 24

பாசுரம் 23

(மூவாயிரப்படி, ஆறாயிரப்படி, நாலாயிரப்படி)

அழகர், கிடாம்பி ஆச்சான் அருளப்பாடு ஒன்று சொல்லிக்காண் என்ன, அபராத ஸஹஸ்ர பாஜனம் என்று தொடங்கி *அகதிம்* என்ன,
*நம் இராமானுசன் உடையராய் இருந்து வைத்து அகதிம் என்னப் பெறாய்*
என்று அருளிச் செய்தார்.

அதாவது ஸ்ரீ கிடாம்பியாச்சான் என்னும் ஆசாரியர், திருமாலிருஞ்சோலை அழகரை சேவிக்கையில், அழகர் அவரை ஒரு சுலோகம் சொல்ல நியமிக்க, அவரும் ஆளவந்தாரின் ஸ்தோத்திர ரத்தினத்திலிருந்து

*அபராத ஸஹஸ்ர பாஜனம்* என்ற ஸ்லோகத்தை விண்ணப்பிக்க, அதில், *அகதிம்* - அதாவது கதி இல்லாதவன் என்ற பொருள்பட அந்தப் பதம் வந்தவாறே, அழகரும் *நம் இராமானுசனின் அடியராய் இருக்கும்போது இப்படி கதியற்றவன் என்று எப்படி விண்ணப்பிக்கலாம்?* என்று அருளிச் செய்தார்.

அதாவது இராமானுசன் அடியாராய் இருந்தும் இப்படிச் சொல்வதேன்? என்று கருத்து.

இதேபோல் இடைச்சிகள் கண்ணனிடம், *யாம் வந்த காரியம் ஆராய்ந்தருள வேணும்* என்று விண்ணப்பிக்க,

'தான் சென்று இவர்கள் காரியத்தை முடித்துக் கொடுக்க வேண்டி இருக்க', நப்பின்னைப் பிராட்டி பரிஹரமாயிருக்க இவர்கள் இப்படி விண்ணப்பிப்பதே!' என்று கண்ணன் திருவுள்ளம்.

தாசன் 🙇 - வானமாமலை பத்மனாபன் - 07-01-2019

===

## *திருப்பாவையில் ஐதீஹ்யங்கள்* 25

*பாசுரம் - 24*

*கதே ஜலே சேது பந்தம் தகப்பனாருக்கும் மகளுக்கும் பணி* என்று ஜீயர் அருளிச் செய்வர்.

நின் கையில் வேல் போற்றி .. மூவாயிரப்படி...பாசுரம்..24

வெள்ளம் அடித்து வடிந்த பிறகு அணை கட்டுவது போல் அவதாரங்கள் எல்லாம் முடிந்து எம்பெருமான் மீண்டும் தன்னுடை சோதிக்கு எழுந்தருளிய பிறகு, ஸ்ரீ பெரியாழ்வாரும் ஆண்டாளும் அவனுக்கு நேர்ந்த ஆபத்துக்களை நினைத்து மங்களா சாசனம் செய்தனர். அதுவே அவர்களுக்குப் பணியாகும்.

*அன்று இவ்வுலகம் அளந்தாய் அடி போற்றி சென்றங்குத் தென்னிலங்கை செற்றாய் திறல் போற்றி* என்றெல்லாம் உலகளந்த அவதாரம் என்ன, ஸ்ரீ ராமாவதாரம் என்ன, ஸ்ரீ கிருஷ்ணாவதாரம் போன்ற எப்போதோ நடந்த எம்பெருமானின் லீலைக்கும் ஆபத்துகளுக்கும் இப்பொழுது அவனுக்கு என் வருமோ என்றும் வயிறுபிடித்து மங்களாசாசனம் செய்கிறார்கள் !!

எம்பெருமான் ஸர்வ சக்தி பொருந்தியவன், மேன்மையானவன், அறப் பெரியவன் என்று உணராதவர்கள் அல்லர் இவர்கள். இருந்தாலும் அவனுடைய ஸௌகுமாரயத்தையும், அழகையும் நினைத்தே இவனுக்கு என் வருமோ என்று மங்களாசாசனம் செய்கிறார்கள் என்றபடி. இங்கு *அஸ்தானே பயசங்கை* என்னும் விஷயம் நினைக்கத்தக்கது. அஞ்சக் கூடாத இடத்தில் அஞ்சுவது. இது எம்பெருமான் மீது பரிவால் வரும் விஷயமாதலால் இது மிகவும் உகந்த விஷயம் என்றபடி.

ஸ்ரீ விதுரரும் தான் இட்ட படுக்கையை, அதில் ஏதாவது இருக்குமோ என்று அஞ்சி, தானே தடவிப் பார்த்தாரிறே. இவர்களையெல்லாம்

மகாத்மா என்று நம் பூர்வாசார்யர்கள் அழைப்பது ஈண்டு நினைக்கத் தக்கது. அவன் மீது அத்யந்த பரிவால் விளைவது இஃது.

தாசன் 🙏 - *வானமாமலை பத்மநாபன்* - 08-01-2019
===

## *திருப்பாவையில் ஐதிஹ்யங்கள்* *26*

பாசுரம் 25

ஒருத்தி மகனாய் .. ஆறாயிரப்படி

*அவளுக்கு முலை சுரவா நின்றதாகில் இவன் அமுது முலை உண்ணா நின்றானாகில் உமக்குச் சேதமென்* என்று பட்டர்.

ஒருத்தி மகனாய்ப் பிறந்து என்று கண்ணன் தேவகி பிராட்டிக்கு பிறந்து வைத்தும், ஸ்ரீ யசோதா தேவி வளர்த்த தாயாய் இருந்தும், அவளிடம் பால் குடித்தது எப்படி என்று கேள்வி.

அதற்கு பட்டர் அவளுக்கு பால் சுரக்க கண்ணனும் பால் குடிக்க இதில் நமக்கென்ன சேதம், நட்டம்.

இது என்ன ஆராய்ச்சி, என்று பட்டர் நயமாக பதிலுரைத்தார் என்றபடி.

தாசன் 🙏 - வானமாமலை பத்மநாபன் - 09-01-2019

---

திருப்பாவை - பாசுரம் 26 - மாலே மணிவண்ணா

மாலே

பெருமாளுக்கு ப்ரதானமான குணத்தை "சரணாகதவத்ஸலர்" என்று ஸ்ரீராமாயணத்துக்கு உள்ளீடாக நிலையிட்டாள் பிராட்டி.

அப்படியே, க்ருஷ்ணனுக்கு ப்ரதானகுணமாய் மஹாபாரதத்துக்கு உள்ளீடான ஆச்ரித வ்யாமோஹத்தை மாலே என்கிற ஸம்புத்தியாலே வெளியிடுகிறார்கள் இடைப்பெண்கள் -- என்ற ஆறாயிர உரை அருளிச்செயல் இங்கு நோக்கத்தக்கது. "மாலாய் பிறந்த நம்பியை மாலே செய்யும் மணாளனை" என்ற நாச்சியார் திருமொழியும் காண்க.

ப. வேங்கடக்ருஷ்ணன் - திருவல்லிக்கேணி - krishisahi@gmail.com

---

## *திருப்பாவையில் ஐதிஹ்யங்கள்* 27

பாசுரம் 27

வழிவார .. மூவாயிரப்படி

நம்பி திருவழுதி வளநாடு தாஸர்

நெய் வாயில் தொங்காதோ !? என்ன *க்ருஷ்ண ஸன்னிதியாலே திருப்தைகளாயிருக்கிறவர்களுக்கு சோறு வாயில் தொங்கிலன்றோ? நெய் வாயில் தொங்குவது* என்று பட்டர் அருளிச் செய்தார்.

அதாவது 'கூடாரை வெல்லும் சீர்க் கோவிந்தா என்ற பாசுரத்தில்' .. 'நெய் பெய்து முழங்கை வழிவார' .. என்னும் பகுதியை நோக்கி திருவழுதிவளநாடு தாஸர் என்பவர் நெய்யை இவர்கள் உண்ணாமல் அது கை வழியாக வழிவது ஏன்? என்று கேள்வி.

இதற்கு பட்டர் கண்ணனுடன் இருப்பவர்கள் அவனுடன் கூட இருப்பதிலேயே திருப்தி அடைகின்றனர். அதுவே அவர்களுக்கு பரம ப்ரயோஜனம்.

ஏனைய விஷயங்களில் அவர்களுக்கு நாட்டம் செல்லாது என்றபடி. அதனால் அவர்களுக்கு பால்சோறு வாயில் தங்கினால் அன்றோ! நெய் தங்குவதற்கு.

கண்ணனை பார்த்த மாத்திரத்தில் பால்சோறு மறந்தார்கள் என்றபடி.

இங்கு உண்ணப் புக்கு வாயை மறந்தாப் போலே என்பது நினைக்கத்தக்கது

தாசன்🙇 - வானமாமலை பத்மனாபன் - 11-01-2019

===

## *திருப்பாவையில் ஐதீகங்கள்* 28

பாசுரம் 28

நாலாயிரப்படி

*பட்டர் அருளிச்செய்யும் பாட்டையும் இங்கே அனுசந்திப்பது*

இதற்குப் புத்தூர் ஸ்வாமி பதிப்பில் (டாக்டர் மதுரை அரங்கராஜன் ஸ்வாமியின் தொகுப்பு) இந்த ஸ்லோகம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

ரங்கஸ்தவம் 2 .89 = *ஞான க்ரியா பஜன ஸம்பத கிஞ்சனோஹம்*

இந்த ஸ்தோத்திரம் கறவைகள் பின்சென்று என்ற பாசுரத்தின் தேர்ந்த கருத்தைக் கொடுக்கிறது.

அதனால் இந்த நாலாயிரப்படி வ்யாக்கியானத்தில் குறிப்பிட்டுள்ள ஸ்ரீ பட்டர் அனுசந்திக்கும் பாட்டாக இதைக் கொள்ளலாம் என்பது இங்கு திருவுள்ளம்.

ஞானயோகம் கர்ம யோகம் பக்தி இல்லாதவன், ஆகிஞ்சன்னியம் அனந்யகதித்வம், இவற்றைப் பற்றி உணராதவன்.

பாவங்கள் கூடுபூரித்திருப்பவன். என்று காஞ்சி ஸ்வாமி உரை.

அதாவது,

அறிவொன்றுமில்லாத என்று கர்ம ஞான பக்தி யோகமில்லை என்று, கறவைகள் பின் சென்றில் ஸ்ரீ ஆண்டாள் நாச்சியாரின் கருத்தோடு இது ஒத்துப் போவது நோக்கவும்.

தாசன் 🙏 - வானமாமலை பத்மனாபன் - 12-01-19

===

## *திருப்பாவையில் ஐதிஹ்யங்கள்-29*

பாசுரம் 29

*கெடுவாய் நாங்கள் இற்றைப் பறைகொள்வான் அன்று காண்* என்று பட்டர் அருளிச் செய்த வார்த்தை.

கோவிந்தா .. நாலாயிரப்படி. .

ஆண்டாள் நாச்சியார் திருப்பாவையில் இதுகாறும், பறை பறை என்று கேட்டு வந்தாள்.

கண்ணனும் பறை என்னும் வாத்தியத்தை கொடுக்க வர, இவர்கள் இந்தப் பறையைச் சொல்லவில்லை; நாங்கள் எதிர்பார்க்கும் பறை வேறு கோவிந்தா.

நீ மேலெழுந்தவாரியான பொருளை கொண்டாய்.

இங்கு கோவிந்தா என்பது பசு மேய்த்து ரக்ஷிப்பதைக் குறிக்கும். பசுமேய்த்து மேய்த்து அந்த இடையர்கள் போல் மடப்பத்தைச் சொல்லுகிறது.

தாசன் 🙏 - வானமாமலை பத்மநாபன் - 13-01-19

*திருப்பாவையில் ஐதிஹ்யங்கள்*- *30*

பாசுரம் 30

கன்றிழந்த தலைநாகு தோல் கன்றுக்கும் இரங்குமாபோலே, இப்பாசுரம் கொண்டு புக நமக்கும் பலிக்கும். (ஆறாயிரப்படி, மூவாயிரப்படி, நாலாயிரப்படி) - என்று பட்டர் அருளிச்செய்வர்.

அதாவது, "கன்றை இழந்த பசு, தோல் கன்றைப் பார்த்தாலும் வைக்கோல் இருந்தாலும் உயிர் இல்லாவிடினும் அதைக் கண்டு பால் சுரக்கும்போது ஆண்டாள் நாச்சியாரைப் போல் நமக்கு அந்தரங்க பக்தி இல்லாவிடினும் எம்பெருமானுடைய கிருபை கிடைக்கும்" என்றபடி மிகுந்த பக்தியுடன் திருப்பாவை பாடி ஆண்டாள் நாச்சியார் அருளினார். சரி,நாமும் இந்த முப்பதும் தப்பாமே திருப்பாவை அனுசந்தித்தால் எங்கும் திருவருள் பெற்று இன்புறுவர் என்பது எப்படி சாத்தியம், என்று விசாரம்! ஏனெனில் ஆண்டாள் நாச்சியாருக்கு உள்ள பக்தி நமக்கு உண்டா என்னும் கேள்விக்குப் பதில்.

மாதவனைக் கேசவனை கண்ணுதல் நஞ்சுண்ட கண்டவனே விண்ணவர் அமுதுண அமுதில் வரும் பெண்ணமுதுண்டு எம்பெருமானே என்கிறபடியே தான் அமிர்தத்தை உண்டு பிரம்மாதிகளுக்குகோதை கொடுத்தான் என்று பட்டர்.

மூவாயிரப்படி

இங்கு மாதவனைக் கேசவனை என்பதற்கு பட்டருடைய சுவையான விளக்கம். எம்பெருமான் பாற்கடலைக்

கடையும்போது அதில் வந்த அமிர்தத்தை தேவர்களுக்கு கொடுத்தான். ஆனால் உண்மையான அமுதமான பிராட்டியைத் தான் எடுத்துக் கொண்டான். அதுதான் மாதவன் என்பதாயிற்று. இப்படி சாக்ஷாத் அமுதத்தை எடுத்துக்கொண்டு அசாரத்தை இவர்களுக்கு கொடுத்தான் என்றபடி !

கோது..அசாரம்..சக்கை

**தாசன் - வானமாமலை பத்மநாபன் - 14-01-19**

==




தாசன் 🙏 -- வானமாமலை பத்மநாபன் 🙏